[1974 மார்ச் 27

தொழில் நுட்பத் தகுதி பெற்ற தட்டச்சர்களுக்கு வழங்கப்படும் படி

திரு. காட்டூர் கோபால் (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

அரசுப் பள்ளிகளில் உள்ள தொழில் நுட்பத் தகுதி பெற்ற தட்டச்சர்களுக்கு வழங்கப்படும் படி ரூ. 25 மானிய உதவி பெறும் பள்ளியில் அதே தகுதியுள்ள தட்டச்சர்களுக்கும் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் தட்டச்சர் பதவிகள் இல்லை. எனவே அவர்களுக்கு படி கொடுக்கும் பிரச்சினை இல்லை.

Grade II—Tamil Pandits.

*225 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether Government have ordered to 240 fully qualified Grade II Tamil Pandits the payment of Grade Tamil Pandits scale of pay as per G.O. Ms. No. 1484, Education, dated 28th August 1973; and

(b) if so, as on 7th December 1973, the number of persons to whom this concession has been extended?

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு ஆணை எம்.எஸ். எண் 1484, கல்வித் துறை, தேதி 28—8—1973-ன்படி, 240 முழுத்தகுதி பெற்ற இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதல்நிலை ஊதியம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், எவ்வளவு பேருக்கு, 7—12—1973 வரை இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். அரசு ஆணை எண் 1484, கல்வித் துறை, தேதி 28—8—1973-ல் ஆணையிட்டுள்ளது.

(இ) எண்ணிக்கை பற்றிய விவரம் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் முதல்நிலை தகுதி பெற்றும் காலியிடம்

இல்லாததினால் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாகவே பணிபுரியும் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரும் 1—1—1974 முதல் முதல்நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இப்படிப்பட்ட இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருக்கிறவர்களுக்கு முதல் நிலைத் தகுதி அளிக்க அரசு முன்வந்திருக்கிறது. எனவே தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலைத் தகுதி பெற்றும், இரண்டாம் நிலைப் பதவியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு முதல் நிலை தரும் வகையில் அரசு ஆணையிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைத் தகுதி பெற்று, இரண்டாம் நிலையிலேயே பணி புரிகிறவர்கள் முதல் நிலை ஆசிரியர்களாகக் கருதப்படுவார்களென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் முதல் நிலைத் தகுதி பெறாமல், 10 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால், அவர்களும் முதல் நிலைத் தமிழாசிரியர்கள் பதவி பெறலாமென்று உத்தரவிடப்பட்டிருக் கிறது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அரசு இட்ட ஆணையிலே தொடக்கப் பள்ளியென்று குறிப்பிடாமலிருக்கிற காரணத்தால், தொடக்கப் பள்ளிக்கும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தொடக்கப் பள்ளிகளில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பதவியில்லை என்று கருது கிறேன். பதவிகள் இல்லாதபோது, இதுவும் இல்லையென்று கருதுகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தொடக்கப் பள்ளிகளில்தான் நடுநிலைக் கல்வியும் வருகிறது. நடுநிலைப் பள்ளிகளிலே இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். எனவே அவர்களுக்கும் இந்த உத்தரவு விஸ்தரிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பதவி என்று இருந்து, அந்தப் பதவியில் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் இருந்தால், அவர்களுக்கு இது பொருந்தும். செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருப்பவர்களில் சில பேர், முதல் நிலைத் தமிழாசிரியர் படிப்பு படித்திருக்கிறார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ., பி.டி. படித்திருப்பது போல, தமிழாசிரியர் படிப்பும் படித்திருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு வராது. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருந்தால், இந்த விதி அடங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 226, 227, 228 ஒத்திவைக்கப்படுகின்றன.

Assignment of Forest Poramboke Lands

* 229 Q.—THIRU S. T. ADIYAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any representation has been made to the Government requesting the assignment of forest poramboke lands to the Harijans in Kandanur village, Ramanathapuram district for cultivation; and

(b) if so, the action taken by the Government thereon?

காடு புறம்போக்கு நிலத்தை ஒப்படைப்பு செய்தல்

திரு. எஸ். டி. ஆதித்தன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கண்டனூர் கிராம அரிசனங்களுக்கு காடு புறம்போக்கு நிலத்தை, விவசாயம் செய்ய ஒப்படைப்பு செய்வதற்கு அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அரசு அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) முடிவு எடுக்கப்படவில்லை.

Workers of the Salem-Erode Electricity Distribution Company.

* 230 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether it is a fact that the striking electricity workers of the Salem-Erode Electricity Distribution Company resorted to sabotage during August, 1973; and

(b) if so, the action taken thereon?